பக்கங்கள் 15+5

மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 சித்திரை 28 சனிக்கிழமை 11.05.2024 அதிர்வு 285

## யாழில் வெப்பத்தால் மேலும் ஒருவர் சாவு!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் நிலவும் கடுமை யான வெப்பம் காரணமாக நேற்றும் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

04▶

# குடும்பப் பெண் கழுத்து நெரித்துப் படுகொலை!

### யாழ். வடமராட்சி கிழக்கில் கொடூரம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு, உடுத்துறைப் பகுதியில் குடும்பப் பெண்ணொருவர் கழுத்து நெரித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

உடுத்துறை வடக்கு, தாளையடியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயான ஜெகசீலன் சங்கீதா (வயது 44) என்பவரே படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி பெண் நேற்று அதிகாலை 5.30 மணியளவில் வீட்டின் கழிவறைக்கு முன்பாக வைக்கப்பட்டிருந்த நீர் நிரப்பப்பட்ட கொள்கலனினுள் (பரல்) தலை மூழ்கிய நிலையில் சடலமாகக் காணப்பட்டுள்ளார்.

அது தொடர்பில் மருதங்கேணிப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக ஒப்படைத்தனர்.

உடற்கூற்றுப் பரிசோதனையில் துணியொன்றினால் பெண்ணின் கழுத்தை நெரித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பெண்ணின் கணவரைக் கைது செய்துள்ள மருதங்கேணி பொலிஸார், தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



### ஜனாதிபதித் தேர்தலில்

# மொட்டுவின் வேட்பாளர் தம்மிக்க?

இவ்வருடம் செப்டெம்பர் இறுதியில் அல்லது ஒக்டோபர் முதல் வாரத்தில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஆதரவுடன் போட்டியிடும் வேட்பாளர் தொடர்பில் விரைவில் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது.

இது தொடர்பில் இறுதி முடிவொன்றை எடுப்பதற்காக விசேட கூட்டமொன்று அடுத்த வாரம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

04▶

# யாழ். போதனா வைத்தியசாலையில் குழந்தை பிரசவித்த 15 வயது மாணவி

### குழந்தையை அநாதரவாக விட்டுவிட்டு தாயாருடன் இன்று காலை தலைமறைவு

(எஸ்.நிதர்ஷன்)

குழந்தையைப் பிரசவித்த பாடசாலை மாணவி குழந்தையை வைத்தியசாலையிலேயே விட்டுவிட்டுச் சென்ற சம்பவம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இடம்பெற்றுள்ளது.

வடமராட்சி, துன்னாலைப் பகுதியைச் சேர்ந்தார் எனது தெரிவித்து 15 வயது சிறுமி ஒருவர் கர்ப்பம் தரித்த



நிலையில் தனது தாயுடன் குழந்தைப் பிரசவத்துக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குழந்தை நேற்று இரவு பிரசவித்த நிலையில், குழந்தையை அநாதரவாக விட்டுவிட்டு இன்று காலை தாய், சிறுமி என இருவரும் தலைமறைவாகியுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக வைத்தியசாலை நிர்வாகத்தால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.




# மன்னாரில் ‘முள்ளிவாய்க்கால் கஞ்சி’

## சிங்கள மக்களும் ஆர்வத்துடன் பருகினர்

**(மன்னார் நிருபர்)**

மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு இன்று காலை 10.30 மணியளவில் மன்னார் – பள்ளிமுனை பெருக்க மரத்துக்கு முன்பாக இடம்பெற்றது.

இதன்போது மன்னார் மாவட்டத்தில் யுத்த காலத்தில் தங்கள் பிள்ளைகளை இழந்த பெற்றோர்கள், முப்படையினரால் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் இணைந்து முள்ளிவாய்க்கால் கஞ்சி தயாரித்து மக்களுக்கு வழங்கினார்கள்.

பள்ளிமுனை மக்கள், இளைஞர்கள், யுவதிகள் உட்பட அதிகளவான மக்கள் உணர்வுபூர்வமாக முள்ளிவாய்க்கால் கஞ்சியை அருந்திச் சென்றனர்.

அதேநேரம் அப்பகுதிக்கு விஜயம் மேற்கொண்ட சிங்கள மக்களும் முள்ளிவாய்க்கால் கஞ்சியை ஆர்வத்துடன் அருந்தியமை குறிப்பிடத்தக்கது.













# யாழில் மின்னல் தாக்கி தீப்பற்றிய தென்னைமரம்

CLICK HERE VIDEO

## அனர்த்தத்தில் சிக்கி ஒருவர் காயம்

**(எஸ்.நிதர்ஷன்)**

யாழ்ப்பாணத்தில் திடீரென ஏற்பட்ட மழையுடனான காலநிலையின்போது தென்னைமரமொன்று மின்னல் தாக்கி தீப்பற்றியது.

உடுவில் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வீடொன்றில் இந்த அனர்த்தம் நேற்று இடம்பெற்றது.

சம்பவத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார் என்று யாழ்ப்பாணம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேசிய மக்கள் சக்தியுடன் வெளிநாட்டுத் தூதர்கள் சந்திப்பு





**(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)**

இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் மஸ்கோசி ஹிடாகி, தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகர் செந்தில் சேல்க் மற்றும் சுவிட்சர்லாந்து தூதுவர் திருமதி. சிறி வோல்ட் ஆகியோருக்கும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுர குமார திசாநாயக்க உள்ளிட்ட பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு அண்மையில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் ஜப்பானியத் தூதரகத்தின் அரசியல் பிரிவுக்கான முதலாவது செயலாளர், தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் அரசியல் பிரிவுக்கான இரண்டாவது செயலாளர், சுவிட்சர்லாந்து தூதரகத்தின் அரசியல் பிரிவுக்கான முதலாவது செயலாளர் ஆகியோரும், தேசிய மக்கள் சக்தியின் சார்பில் தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் டாக்டர் ரிஷ்வி சாலி, தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் சரோஜா போல்ராஜ், தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகர், தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது, இலங்கையில் இனங்களுக்கு இடையிலான சமாதானம் மற்றும் நல்லிணக்கம் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டது. இது பற்றிய தேசிய மக்கள் சக்தியின் கொள்கைகள் மற்றும் தீர்வுக்கான அணுகுமுறைகள் குறித்தும் தூதுக்குழு பிரதிநிதிகள் வினவினர்.

இதன்போது தேசிய மக்கள் சக்தி "தாம் எந்தவொரு நிலையிலும் அரசியலுக்காக இனவாதத்தை பயன்படுத்த தயாரில்லை" என்பதை சுட்டிக்காட்டியது.

சமத்துவம் மற்றும் ஜனநாயகத்தின் அடிப்படையில் தேசிய பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்குத் தாம் தயாராக இருப்பதாக வலியுறுத்திய தேசிய மக்கள் சக்தியின் பிரதிநிதிகள், தேசிய பிரச்சினைக்கு தனித்து ஒரு தீர்வைப் பெற்றுக்கொடுக்க முடியாது எனவும், அது ஏனைய காரணிகளுடன் பிணைந்து காணப்படுவதால் தீர்வை எட்டும்போது ஒட்டுமொத்த விடயங்களிலும் கவனம் செலுத்த வேண்டும் என்றும் சுட்டிக்காட்டியது.

இந்த விவகாரங்களில் சர்வதேச சமூகம் கொண்டிருக்கும் அக்கறை குறித்து தேசிய மக்கள் சக்தி தூதுக்குழு விஷேடமாக நன்றியைத் தெரிவித்துக் கொண்டது.

# பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் கோறளைப்பற்று விவசாய சமூகத்தினர்!

## ஆளுநர் ஹாபிஸ் நஸீர் அஹமட் தலைமையில் விஷேட கூட்டம்





**(எம்.எம்.ஜெஸ்மின்)**

கோறளைப்பற்று விவசாயிகள் எதிரிகொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயும் விசேட கூட்டம், கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்தில் முன்னாள் சுற்றாடல் அமைச்சரும், வடமேல் மாகாண ஆளுநருமான ஹாபிஸ் நசீர் அஹமட் பங்குபற்றுதலுடன் பிரதேச செயலாளர் எஸ்.எச்.முஸம்மில் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச செயலாளர் ஏ.தாஹிர், உதவித்திட்டமிடல் பணிப்பாளர்களான எம்.ஏ.ரியாஸ், எம்.எம்.றுவைத், கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச சபைச் செயலாளர் எஸ்.எம்.சஹாப்தீன், கல்குடா இணைப்பாளர் எம்.ஜவாத் மற்றும் விவசாய அமைப்பினர், அரச அதிகாரிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது சூழலுக்கு பாதகம் விளைவிக்கும் மரம் அரி ஆலைகள், அரிசி ஆலைகள் என்பவற்றை கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச செயலக எல்லைக்கு உட்பட்ட கடதாசி ஆலைக் காணிக்குள் சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.





# வழிப்பறியில் ஈடுபட்ட குற்றத்தில் இருவர் வாளுடன் சிக்கினார்கள்

## மோட்டார் சைக்கிளும் மீட்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் வழிப்பறியில் ஈடுபட்டு வந்த குற்றச்சாட்டில் இருவர் வாளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் ஒருவர் தலைமறைவாகியுள்ள நிலையில் அவரைக் கைது செய்வதற்குப் பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் கடந்த வாரம் வீதியில் சென்று கொண்டிருந்த பெண்ணொருவரை வழிமறித்து கத்தியைக் காட்டி அவரது சங்கிலியை மூவர் அடங்கிய வழிப்பறிக் கொள்ளைக் கும்பல் கொள்ளையடித்துச் சென்றிருந்தது.

சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட பெண், பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்த நிலையில், முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

விசாரணைகளின் அடிப்படையில் வழிப்பறிக் கொள்ளைக் கும்பலை சேர்ந்தவர்கள் எனும் சந்தேகத்தில் இருவரைக் கைது செய்துள்ள பொலிஸார், வழிப்பறிக் கொள்ளைக்குப் பயன்படுத்திய மோட்டார் சைக்கிளையும், வாள் ஒன்றையும் அவர்களிடமிருந்து பொலிஸார் மீட்டுள்ளனர்.

அத்துடன் அந்த வழிப்பறிக் கொள்ளைக் கும்பலைச் சேர்ந்த மற்றுமொரு நபர் தலைமறைவாகியுள்ளார் எனவும், அவரையும் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# பதுளை விபத்து உயிரிழப்பு எண்ணிக்கை 2 ஆக உயர்வு

பதுளை – மகியங்கனை பிரதான வீதியில் புவக்ஹொடமுல்ல பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த மற்றுமொருவர் உயிரிழந்துள்ளார்.

இதையடுத்து அந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை இரண்டாக உயர்ந்துள்ளது.

தெஹியத்துகண்டிய சிறிபுரவிலிருந்து பதுளை நோக்கிப் பயணித்த இ.போ.ச. பஸ்ஸும் பதுளையிலிருந்து ரிதிபான நோக்கிப் பயணித்த ஓட்டோவும் ஒன்றுடன் ஒன்று மோதுண்டு விபத்துக்குள்ளாது.

இதில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன் நால்வர் படுகாயமடைந்து பதுளை போதனை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், சிகிச்சை பலனின்றி மற்றுமொருவர் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பதுளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**மொட்டுவின்...**

மொட்டுக் கட்சி நான்கு பேரின் பெயர்கள் தொடர்பில் பரிசீலித்து வருகின்றது. அந்த ஜனாதிபதி வேட்பாளர் பெயர்ப் பட்டியலில் நாடாளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேராவின் பெயரும் உள்ளது. அவர் குறித்து மொட்டுக் கட்சி விசேட கவனம் செலுத்தியுள்ளது எனக் கூறப்படுகின்றது.

மே தினக் கூட்டத்தின்போது கூட தம்மிக்க பெரேராவுக்கு மொட்டுக் கட்சி முன்வரிசை ஆசனத்தை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**யாழில்...**

அல்வாய் கிழக்கு, ஆண்டவர் தோட்டம் பகுதியைச் சேர்ந்த 68 வயதுடைய வல்லிபுரம் கோபாலசிங்கம் என்பவரே உயிரிழந்துள்ளார்.

அவர் வீட்டில் மயக்கமுற்ற நிலையில், வீட்டில் இருந்தவர்களால் மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் உடற்கூற்றுப் பரிசோதனை நேற்று சட்ட வைத்திய அதிகாரியால் மேற்கொள்ளப்பட்டது. கடுமையான வெப்பத் தாக்கத்தால் உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது என்று அவர் அறிக்கையிட்டார்.

அதேவேளை, கடந்த வியாழக்கிழமை புன்னாலைக்கட்டுவன் பகுதியில் 44 வயதுடைய நபர் ஒருவரும் கடும் வெப்பத் தாக்கத்தால் உயிரிழந்திருந்தார்.

அத்துடன், அண்மைய நாட்களில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த ஐவர் “ஹீட் ஸ்ரோக்” ஏற்பட்டு உயிரிழந்துள்ளனர் என்று வைத்தியசாலையின் பொது வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி ரி.பேரானந்தராஜா ஊடக சந்திப்பில் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



# தவறு செய்தவர்களை தண்டிக்காது மொத்த விவசாயிகளுக்கும் ஆப்பு!

## மாந்தை மேற்கு விவசாயிகள் கூட்டமைப்புக் கண்டனம்

( வாஸ் கூஞ்ஞ)

கடந்த வருடம் (2023) ஓரிருவர் செய்த தவறுக்காகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் திட்டமிட்டு ஒரு கிராமத்தின் விவசாய நெற்செய்கைக்கு ஆப்பு வைத்தமை கண்டனத்துக்கு உரியது.

இது தொடர்பாக வடக்கு மாகாண ஆளுநருக்கு ஊடாக அமைச்சருக்கு அவசரக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக மாந்தை மேற்கு விவசாயிகள் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மாந்தை மேற்கு விவசாயிகள் கூட்டமைப்பு தெரிவித்துள்ளதாவது,

மன்னார் மாவட்டத்தின் பிரதான குளமாகிய கட்டுக்கரைக் குளத்தின் கீழ் 2024 ஆம் ஆண்டின் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ள நிலையில் கட்டுக்கரை குளத்தின் கீழான 2024 ஆம் ஆண்டுக்கான பயிர்ச்செய்கைக்கு தெரிவு செய்யப்பட்ட புலவுகளில் நெடுங்கண்டல் புலவுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இதற்கு சம்பந்தப்பட்ட இரு அதிகாரிகளின் தனிப்பட்ட குரோதமே காரணம்.

அதாவது 2023 ஆம் ஆண்டு சிறுபோக செய்கைக்காக தாம் குறித்த புலவுக்குக் காணிகளை விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்க வந்தபோது தங்களை மரியாதையின்றி நடத்தியதாக தெரிவித்தே இந்த முறை குறித்த குளத்திற்கு சிறுபோக செய்கைக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குளம் பூட்டப்படுவதால் 400 இற்கும் அதிகமான விவசாயக் குடும்பங்கள் பாதிப்படையும். இதனால் இந்தப் பகுதி விவசாயிகளின் வாழ்வாதாரம் முடக்கப்படும்.

இந்தக் குளத்தை ஊடறுத்துப் பிரதான வீதி செல்கின்றது. அதன் இருமருங்கும் அடர்ந்த மதுரமரச் சோலையும் இயற்கை வனப்பு வாய்ந்த பகுதியாகவும் சிறுபோக செய்கை காலத்தில் எங்கும் பச்சைப் பசேல் என்று காணப்படும் ஒரு பகுதியாகவும் இது காணப்படுகின்றது.

இந்தப் பகுதி சுற்றுலா பயணிகளும் மன்னார் மாவட்டத்தின் பல பிரதேச மக்களும் வந்து செல்லும் சுற்றுலா பகுதியாகவும் படப்பிடிப்பு பகுதியாகவும் விளங்குகின்றது.

சம்பந்தப்பட்ட இக்குளம் பூட்டப்பட்டால் இதன் மூலம் வருமானமீட்டும் இந்தப் பிரதேச வர்த்தகர்களும் பாதிப்படையும் நிலை காணப்படுகின்றது.

ஓரிருவர் விட்ட தவறுக்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் மன்னிப்பு கோரியதுடன் குற்றம் விளைவித்தவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும்படியும் கோரப்பட்டது. இந்த அதிகாரிகள் அதைவிடுத்து இப் பகுதி ஒட்டுமொத்த விவசாயிகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளனர்.

200 ஏக்கர் காணியை உடைய நெடுங்கண்டல் புலவைப் பூட்டி மேட்டு துருசின் கீழ் நெற்செய்கைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இது அதிகாரிகளின் பொறுப்பற்ற தன்மையை வெளிப்படையாக காட்டுகிறது.

இது தொடர்பாக மாவட்டச் செயலாளரிடம் நேரடியாகவும் எழுத்து மூலமும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் இது தொடர்பில் கவனத்துக்கு எடுக்காத நிலைமை காணப்படுகிறது.

எனவே உரிய தரப்பினர் இது தொடர்பாக ஆராய்ந்து நெடுங்கண்டல் குளத்தை 2024 சிறுபோக செய்கைக்காக திறக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

தவறுமிடத்து மாவட்டச் செயலாளர் அலுவலகத்துக்கு முன்பாகக் கண்டன ஆர்ப்பாட்டம் செய்யத் தீர்மானித்துள்ளோம்.– என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சம்மாந்துறை வைத்தியசாலைக்கு விரைவில் மயக்க மருந்து நிபுணர்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு விரைவில் மயக்க மருந்து நிபுணர ஒருவரை பெற்றுக் கொடுப்பதற்கு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சகீலா இஸ்ஸதீன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் நீண்ட காலமாக மயக்க மருந்து நிபுணர் இன்மையால் சில அறுவை சிகிச்சைகளிலும் ஏனைய மருத்துவ தேவைகளிலும் அசௌகரியங்கள் எதிர்நோக்கப்பட்டு வருகின்றது.

இதனால் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சகீலா இஸ்ஸதீன் சுகாதார அமைச்சில் நேரடியாக இவ்விடயத்தை கொண்டு சென்றமையால் மயக்க மருந்து நிபுணர் ஒருவரை நியமிப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## இது சட்டத்தின் ஆட்சியா?

இலங்கையில் நல்ல - உயர்வான - சட்டங்கள் இருக்கின்றன. ஆனால் அவை பெரும்பாலும் நடைமுறையில் இல்லை. வெறும் ஏட்டுச் சுரைக் காய்தான். நிஜத்தில் - ஒழுங்கில் - இல்லை.

இலங்கை தன்னை உயர்வான ஜனநாயக நாடு என்று பீற்றுக் கொள்ளும். சட்டத்தின் ஆட்சி நிலவுவதாக தம்பட்டம் அடிக்கும். ஆனால் நாட்டின் மீயுயர் சட்டமான அரசமைப்பில் இருக்கின்ற சட்ட ஏற்பாடுகளைக் கூட கடந்த 38 வருடங்களாக நடைமுறைப்படுத்த மாட்டோம் என்று அடம் பிடிக்கும் மிகக் கீழ்த்தரமான சட்டவாட்சி நிலவும் - கடைகெட்ட - நாடும் இதுதான்.

இந்த நாட்டில் சட்டத்தின் நடைமுறையாக்கத்துக்குப் பொறுப்பானவர்கள் வெட்கப்படக் கூடிய - வெட்கம் கெட்ட- விடயங்களே இங்கு அரங்கேறிக் கொண்டிருக்கின்றன.

இந்த நாட்டின் பிரஜையே அல்லாத ஒருவர் இந்த நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினராகவும் அமைச்சராகவும் சுமார் 4 ஆண்டுகள் இருந்திருக்கின்றார். இந்த நாட்டில் விசாவே இல்லாமல் இங்கு சுமார் பத்து வருடங்கள் வசித்திருக்கின்றார். இது தவறுதலாக - கவனக்குறைவாக இடம்பெற்ற அல்லது நடந்த விடயமன்று.

இதுகுறித்து குற்றப்புலனாய்வுத் துறையினருக்கு உரிய முறையில் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. அவர்கள் விசாரித்திருக்கின்றனர். அவர்களுக்கு விடயம் நன்கு தெரிந்திருக்கின்றது. ஆனால் அவர்கள் நடவடிக்கை எடுக்காமல் விட்டேத்தியாக இருந்திருக்கின்றனர். உயர் நீதிமன்ற தீர்ப்பில் அது அம்பலமாகியும் இருக்கிறது. அதன்பின்னர் நடவடிக்கை அது, இது என்று இப்போது பெரும் ஆரவாரம் பண்ணுகிறார்கள்.

இந்த விடயம் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. அங்கும் மூடிமறைப்பே மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது என்பதை உயர் நீதிமன்றத் தீர்ப்பு அம்பலப்படுத்தியுள்ளது.

இதில் வேடிக்கை என்னவென்றால், இப்போதும் நாடாளுமன்றத்தில் இருக்கும் உறுப்பினர்களில் எத்தனை பேருக்கு இலங்கைப் பிரஜா உரிமை இல்லை என்பதையோ அல்லது இரட்டைப் பிரஜாவுரிமை பெற்றமையால் எம்.பி. பதவியை வகிக்க தகுதியில்லை என்பதையோ உறுதி செய்ய சட்ட - நீதித் துறையினருக்கு இயலாத - கையாலாகாத - நிலையே நீடிக்கின்றது.

டயானா கமகே போன்ற தகுதி இல்லாதவர்கள் எத்தனை பேர் நாடாளுமன்றக் கதிரைகளில் இன்னும் குந்தி இருக்கின்றார்கள் என்பதை மக்களாகத் தேடிக் கண்டுபிடித்து அம்பலப் படுத்தினால் மட்டுமே உண்டு. இல்லையேல் அவர்களைத் தவறான முறையில் எம்.பி. பதவியில் தொடர விடுவதைத் தவிர, இலங்கையின் சட்ட முறைமைக்கு - நீதி நிர்வாகக் கட்டமைப்புக்கு - வேறு இயலுமை இல்லை என்பதுதான் இந்த நாட்டின் சட்டத்தின் ஆட்சியைக் கேலிக்குரியதாக்குகின்றது.

நாடாளுமன்றத் தேர்தலுக்கு வேட்புமனுத் தாக்கல் செய்யும்போது, வேட்பாளர்கள் எல்லோரும் இலங்கைப் பிரஜைகளா, அவர்கள் யாரேனும் இரட்டைப் பிரஜைகளா என்ற விடயங்களைத் தேடி கண்டுபிடித்து உறுதிப்படுத்துவது முடியாதது எனத் தேர்தல் ஆணையத்தின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்னாயகா கூறுகின்றமையைப் புரிந்து கொள்ள முடிகின்றது.

உண்மைதான். தேர்தலில் போட்டியிடும் ஒவ்வொருவரையும் ஆய்வு செய்து கண்டுபிடிப்பது இயலாத காரியமாக இருக்கலாம். ஆனால் குறைந்தபட்சம், நாடாளுமன்றுக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களின் நிலைமையைக் கண்டறிவதற்கான விசாரணை பொறிமுறையாவது நாட்டில் உள்ளதா என்று கேட்டால் இல்லவே இல்லை என்பதுதான் பதில்.

குறிப்பாக பிரஜாவுரிமை தொடர்பில் சந்தேகங்களுக்குள்ளாகும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குறித்தாவது விசாரித்து உறுதிப்படுத்தும் சட்டமுறை நாட்டில் இல்லை. யாரேனும் பொதுமகன் சி.ஐ.டி. வேலை செய்து, புலனாய்வு நடத்தி, நீதிமன்றுக்கு கொண்டு வந்தால்தான் பொலிஸாரும் சட்ட நடைமுறைத் துறையினரும் கண்விழிப்பார்களாம்.

நல்ல சட்டம்... நல்ல நாடு... நல்ல நீதி.... நல்ல நிர்வாகம்..... போங்கள்!

# விருகம்மான வீட்டுத் தொகுதியில் வீடொன்று தீப்பற்றி எரிந்து நாசம்!





(ஹஸ்பர் ஏ.எச்.)

திருகோணமலை மாவட்டத்தின் நிலாவெளி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பெரியகுளம், விருகம்மான வீட்டுத் தொகுதியில் வீடொன்று தீப்பற்றி எரிந்து நாசமாகியுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று (10) நள்ளிரவு 12.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

அன்றைய தினம் வீட்டை பூட்டிவிட்டு திருகோணமலை கடற்படைக்கு முன்னால் உள்ள தனது கடையில் வீட்டு உரிமையாளர் தங்கியிருந்த நிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று வீட்டு உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

இதில் பல பெறுமதியான வீட்டு உபகரணங்கள் எறிந்து நாசமாகியுள்ளன என்றும் பல லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். வீடு தீ பற்றியமை தொடர்பில் காரணம் இதுவரைக்கும் வெளியாகவில்லை.

சம்பவம் தொடர்பில் நிலாவெளி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று உரிமையாளர் மேலும் தெரிவித்தார்.

குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நிலாவெளி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்



# மாகாண மாஸ்டர் அத்லடிக் சம்பியன்ஸிப் போட்டி; கல்முனையில் இரு ஆசிரியர்களுக்குத் தங்கம்!

(எஸ்.அஷ்ரப்கான், அஸ்ஹர் இப்றாஹிம்)

மாகாண மாஸ்டர் அத்லடிக் சம்பியன்ஸிப் - 2024 போட்டிகள் கடந்த மாதம் 27, 28 ஆம் திகதிகளில் கண்டி போஹம்பர மைதானத்தில் நடைபெற்றன.

இந்தப் போட்டியில் கல்முனை அல் - மிஸ்பாஹ் வித்தியாலயத்தின் சிரேஷ்ட உடற்கல்வி ஆசிரியர் நிஸ்மி மஜீத் 100 மீற்றர் ஹேடில்ஸ் போட்டியில் கலந்துகொண்டு தங்கப் பதக்கத்தையும் அதேபோல கல்முனை ஸாஹிராக் தேசிய பாடசாலையின் உடற்கல்வி ஆசிரியர் எம்.வை.எம். றகீப் 110 மீற்றர் ஹேடிஸ் போட்டியில் கலந்து கொண்டு தங்கப் பதக்கத்தையும் தனதாக்கிக் கொண்டனர்.

இவர்களைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு கல்முனை வலயக் கல்வி பணிமனையில் வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜிம் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கல்முனை வலய உடற்கல்விப் பணிப்பாளர் எம்.எல்.எம். முத்தாரிஸ் மற்றும் உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் ஏ.எம்.அன்சார் ஆகியோரும் கலந்துகொண்டனர்.




# உக்ரைனுக்கு அள்ளிக் கொடுக்கும் அமெரிக்கா...?

- ஐங்கரன் விக்கினேஸ்வரா -

இதுவரை காலமும் அமெரிக்க செனட் சபையில், இழு பறி நிலையில் இருந்த பிரச்சினை சில தினங்களுக்கு முன்னர் சுமூகமாக முடிவடைந்துள்ளது. அதுவே உக்ரைனுக்கு ஆயுதங்களை அள்ளிக் கொடுக்கும் அமெரிக்காவின் முடிவாகும்.

நீண்டு செல்லும் இப்போரும் வியட்நாம் – ஆப்கான் – ஈராக் போல ஆயுதங்களைப் போட்டு விட்டு ஓட வேண்டிய நிலமை அமெரிக்காவுக்கோ அல்லது ரஷ்யாவுக்கோ ஏற்படலாம்.

### வியட்நாமில் அமெரிக்க தோல்வி

ஏன் எனில் முன்னைய வரலாற்று நிகழ்வுகளை உற்று நோக்கினால் இந்த உண்மை புலப்படும். வியட்நாமில் எதிரியிடம் வீழ்ச்சியடைந்து கொண்டிருக்கும் ஒரு நகரத்தில் இருந்து ஹெலிகாப்டர்கள் மூலம் மக்களை வெளியேற்றும் நிகழ்வு, அப்போதய செய்தித் தாள்களின் முதல் பக்கத்தில் வெளிவந்து அதிர்ச்சியூட்டின.

அன்று வியட்நாமில் நடந்தது, பின்னர் ஆப்கானிஸ்தானில் ரஷ்யாவுக்கும் – அமெரிக்காவுக்கும் ஏற்பட்டது. ஆயினும் இதில் மேலோட்டமான ஒற்றுமை இருந்தாலும் சில முக்கியமான வேறுபாடுகளும் உள்ளன.

வியட்நாம் 1954 இற்குப் பிறகு இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. வடக்கு வியட்நாமில், கம்யூனிஸ்டுகள் அதிகாரத்தில் இருந்தனர். தெற்கு வியட்நாமின் அரசியல் சக்திகள் அமெரிக்காவை நோக்கிச் சென்றன. ஒவ்வொரு தரப்பினரும் வியட்நாமை ஒன்றிணைக்க முயன்றனர்.

1965 முதல், தென் வியட்நாமிய ஆட்சிக்கு அமெரிக்கா வெளிப்படையான இராணுவ உதவியை வழங்கியது. வழக்கமான அமெரிக்க துருப்புக்கள், தெற்கு வியட்நாமின் இராணுவத்துடன் சேர்ந்து, வட வியட்நாம் துருப்புக்களுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளில் பங்கேற்றன.

ஆயுதங்கள், உபகரணங்கள் மற்றும் இராணுவ நிபுணர்களுடன் வடக்கு வியட்நாமுக்கு மறைக்கப்பட்ட உதவி சோவியத் ஒன்றியம் மற்றும் சீனாவால் வழங்கப்பட்டது. 1975 இல் வடக்கு வியட்நாம் கம்யூனிஸ்டுகளின் வெற்றியுடன் போர் முடிவுக்கு வந்தது.

### ஆப்கானில் ரஷ்யாவின் தோல்வி

முதல் ஆப்கான் போரானது மாஸ்கோவை நோக்கிய ஒரு அரசியல் ஆட்சியை ஆதரிப்பதற்காக சோவியத் ஒன்றியம் 1979 இல் ஆப்கானிஸ்தானுக்கு துருப்புக்களை அனுப்பியது. முஜாஹிதீன்களுக்கு எதிராக சோவியத் துருப்புக்கள் மற்றும் ஆப்கானிஸ்தான் அரசு இராணுவம் போரிட்டது.

அமெரிக்கா மற்றும் நேட்டோவின் ஆதரவை அனுபவித்த ஆப்கானிஸ்தானின் முஜாஹிதீன்கள் அதற்கேற்ப அவர்களுடன் ஆயுதம் ஏந்தியிருந்தனர். சோவியத் துருப்புக்கள் 1989 இல் ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேறினர். அவர்கள் வெளியேறிய பிறகும் போர் தொடர்ந்தது.

மீண்டும் ஆப்கானிஸ்தான் மீது படையெடுப்பு நடந்தது. இந்த முறை அமெரிக்கா 2001 இல் தனக்கு சார்பான ஆப்கான் அரசை நிறுவியது. ஆயினும் இறுதியில் ஆப்கானில் உள்நாட்டு அரசுகளை மீண்டும் கட்டமைக்க முயன்றபோது பலத்த சிக்கலில் சிக்கியது.

### ஆப்கானில் அமெரிக்காவின் தோல்வி

ஆப்கானில் அமெரிக்காவின் தோல்வியை சான்றுபகரும் வண்ணம், காபூல் விமான நிலையத்தில் இருந்து வந்த இதயத்தை நொறுங்கச் செய்யும் புகைப்படங்கள், இந்த விமர்சனங்களுக்கு வலுச் சேர்க்கின்றன. மேற்கு நாடுகள் ஆப்கானிஸ்தானில் நிறைய ரத்தத்தைச் சிந்தியிருக்கின்றன.

அத்துடன் பல்லாண்டுக் கணக்கில் பெரும் பணத்தைச் செலவிட்டிருக்கின்றன. இவற்றை விட ஆப்கானியர்கள் கொடுத்திருக்கும் விலை

தொடர்ச்சி▼



Vietnam, 1975



Afghanistan, 2021

# உக்ரைனுக்கு அள்ளிக் கொடுக்கும் அமெரிக்கா...?

**தொடர்ச்சி▲**

இன்னும் அதிகம் என்பதே உண்மையாகும்.

இறுதியில் வியட்நாம், ஈராக் போல் கனரக ஆயுதங்களைப் போட்டுவிட்டு காபூலில் அமெரிக்கா ஓடிய காட்சிகள் வெளிவந்தன. தற்போது உக்ரைனுக்கு அள்ளி அள்ளிக் கொடுக்கும் அமெரிக்காவின் ஆயுதங்களுக்கும் இதே நிலமை ஏற்படுமா என்பதும் எதிர்காலத்தில் தெரியவரும்.

## உக்ரைனுக்கு அமெரிக்க ஆயுதங்கள்

உக்ரைன் – ரஷ்யா இடையிலான போர் இரண்டரை வருடங்களைக் கடந்து தொடர்ந்து நடைபெற்று வருகிறது. நீண்ட கால அடிப்படையில், சுமார் 60 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான அதி நவீன ஆயுதங்களை அமெரிக்கா உக்ரைனுக்கு வழங்கவுள்ளது.

சிறிய நாடான உக்ரைன், பல்வேறு நாடுகளின் உதவி மற்றும் அமெரிக்காவின் ராணுவ உதவியுடனும் தொடர்ந்து சண்டை செய்து வருகிறது.

இந்த சூழலில், உக்ரைனுக்கு ஆதரவாகப் புதிய ராணுவ உதவிப் பொதியை அறிவிக்கும் என்று வெள்ளை மாளிகை ஏற்கெனவே தெரிவித்திருந்தது. 60 பில்லியன் டொலர் மதிப்புள்ள ஆயுதங்களை அமெரிக்கா வழங்கியுள்ளது.

இந்த ஆயுதங்கள் அமெரிக்காவில் இருந்து போலந்தில் உள்ள நேட்டோ கட்டளைத் தளம் சென்று , அங்கே இருந்து படிப்படியாக உக்ரைன் கொண்டு செல்லப்படும் என்று கூறப்படுகிறது.

## ரஷ்யாவுடன் நேரடி மோதல்

இந்த ஆயுதங்கள் உக்ரைன் நாட்டை அடைந்தால், அது ரஷ்யாவுடன் நேரடியா மோதுவதற்கு சமன் என்று ரஷ்ய அதிபர் புடின் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார். மூன்றாம் உலகப் போர் ஒன்றை ஆரம்பிக்க அமெரிக்க விரும்பியுள்ளது என்றும் கூறியுள்ளார்.

இதில் பல வான் பாதுகாப்பு கட்டமைப்பு, டாங்கி எதிர்ப்பு பீரங்கிகள், கவச வாகனங்கள், குறும் தூர ஏவுகணைகள், என்று பல ஆயுதங்கள் அடங்குகின்றன.

இதனூடாக உக்ரைன், மிகப் பலம் பொருந்திய இராணுவத்தை உருவாக்க உள்ளது. அதி நவீன ராடர்கள், மின் காந்த அலைகளை உருவாக்க கூடிய ஏவுகணைகள் என்று பல தரப்பட்ட ஆயுதங்களை அமெரிக்கா உக்ரைனுக்கு அள்ளிக் கொடுக்க உள்ளது. இது ரஷ்யாவுக்கு பெரும் சங்கடத்தை ஏற்படுத்துவது மட்டுமல்லாது, பெரும் முட்டுகட்டையாகவும் அமைய வாய்ப்புகள் உள்ளது.

இஸ்ரேலுக்கும் அதிக உதவி

இதேவேளை, 26 பில்லியன் டொலர் ஆயுதங்களை இஸ்ரேலுக்கும் வழங்க, அமெரிக்க செனட் சபை ஒப்புதல் அளித்துள்ளது. மத்திய கிழக்கில் இஸ்ரேலியர்களுக்கு இதே போன்ற பிரச்சினை உள்ளது என்று அமெரிக்க இராணுவ நிபுணர்கள் கூறுகின்றனர்.

உக்ரைனுக்கு ஆயுதங்களை அள்ளிக் கொடுக்கும் அமெரிக்காவின் நிலையானது, வியட்நாம் – ஆப்கான் – ஈராக் போல ஆயுதங்களை போட்டு விட்டு ஓடும் நிலைமை ஏற்படலாம்.

அதேவேளை, நீண்டு செல்லும் இப்போரும் ஆப்கானில் சோவியத் துருப்புக்கள் பின் வாங்கிய நிலமை போல, உக்ரேனிய களத்தில் ரஷ்யாவுக்கு ஏற்பட சாத்தியங்கள் உண்டு.

# இரசாயனமற்ற ஊட்டச்சத்து உணவு தொடர்பான செயலமர்வு கற்பிட்டியில்





**(கற்பிட்டி சியாஜ்)**

கற்பிட்டி பிரதேச செயலகத்தில் ஊட்டச்சத்து உணவுக்கான பல்துறை செயற்றிட்டம் சம்மந்தமான செயலமர்வு கற்பிட்டி பிரதேச செயலாளர் சமில இந்திக ஜயசிங்க தலைமையில் புத்தளம் மாவட்ட செயலகத்தின் திட்டமிடல் பிரிவின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

இரசாயன ஊட்டச்சத்து இல்லா மல் போஷாக்கான உணவுத் திட்டமிடலை மேற்கொள்ளல் என்ற தொனிப் பொருளில் இது இடம்பெற்றது.

செயலமர்வைப் புத்தளம் மாவட்டத் திட்டமிடல் பிரிவின் பணிப்பாளர் கீத் மற்றும் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் மதுவந்தி மற்றும் கற்பிட்டி சுகாதார வைத்திய அதிகாரி தர்மசிறி ஆகியோர் வழிநடத்தினர்.

இதில் அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள், கற்பிட்டி பிரதேச சபையின் வெளிக்கள ஊழியர்கள், வங்கி ஊழியர்கள், கற்பிட்டிக் கோட்டக் கல்விப் பணிமனை ஊழியர்கள், வெளிக்கள நடவடிக்கைகள் மேற்கொள்ளும் அரச ஊழியர்கள், சமூக சேவை தொண்டு நிறுவன தொண்டர்கள் மற்றும் பல்கலைக்கழக இறுதி யாண்டு மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்தச் செயலமர்வுக்கான நிதி உதவியைச் சர்வோதய அமைப்பு வழங்கியது.



# தென்கிழக்கு பல்கலைக் கழக மாணவர்கள் காரைதீவு கண்டல் காடுகளில் களப்பயணம்

**(எம்.எம்.ஜெஸ்மின்)**

அம்பாறை மாவட்டத்தில் காணப்படும் மிக முக்கியமான கண்டல் சூழல் தொகுதியை தன்னகத்தே வைத்துள்ள ஒன்றிரண்டு பிரதேசங்களில் காரைதீவும் ஒன்றாகும்.

மிக மிக முக்கியமான பிரதேசமாக அதன் வனப்பும், அழகும், தாவரங்களும், செடி, கொடிகளும், விலங்குகளும், பறவைகளும் தனிச் சிறப்புக்குரியவை. இவை தனியே கிண்ண மரங்களை வைத்திருக்கும் அதிசயக் காடாகும்.



காரைதீவு பிரதேச செயலாளர் எஸ். ஜெகராஜன், வழிகாட்டலில், தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞான பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ.எம்.றியாஸ் அஹமட், காரைதீவு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், காரைதீவு சுற்றுச்சூழல் கழக உறுப்பினர்கள், காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரி மற்றும் சண்முகா மகா வித்தியாலய பாடசாலைகளின் சுற்றாடல் முன்னோடிக் கழக ஜனாதிபதி பதக்கத்துக்காக ஆய்வுகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் மாணவர்கள் ஆகியோர்களின் பங்குபற்றதலுடன் காடறிதல் எனும் "சூழலியல் நடை" களப் பயணம் மேற்கொள்ளப்பட்டது.

பிரதேசத்தின் அற்புத வனத்தின் மீதான ஆய்வுகள் பல்கலைக்கழக மாணவர் மட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கு உரிய அத்தனை செழிப்புக்களையும், பெறுதிகளையும் இந்தக் காடு வைத்திருக்கின்றது எனவும் பெரும்பாலான எல்லாக் கிராமங்களுமே காட்டை மூடி ஏப்பம் விட்ட சமயத்தில், காரைதீவின் இந்தக் கண்டல் காடு, காரைதீவுக்கு பாரம்பரியமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பாரம்பரியத்தை அழிந்து போகாமல் காப்பது அனைவரின் கடமையாகும் என்று வளவாளராகக் கலந்து கொண்ட சிரேஷ்ட விரிவுரையாளர்களால் தெரிவிக்கப்பட்டது.

# கால ஓட்டத்துக்கு ஏற்ப நகர வேண்டிய நிலைப்பாட்டில்...!

**(எம் மக்கள் நீண்ட காலமாக உரிமைக்காக போராடி வருகின்றனர். அந்த மக்களை ஒருபோதும் அபிவிருத்தி திருப்திப்படுத்தாது. அவர்கள் அபிவிருத்திக்கு விலைபோகவும் மாட்டார்கள் என்பதை ஆட்சியாளர்கள் உணர்வதில்லை)**

நாடு பாரிய நெருக்கடிக்குள் சிக்கிச் சிதைந்து தற்போது அதிலிருந்து ஓரளவுக்கு மீண்டுவரும் நிலையில் தேர்தல் பற்றிய பேச்சு மற்றும் எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் அதிக எதிர்பார்ப்பு நிலவி வருகின்றது.

ஒருபுறம் தேர்தல் தொடர்பான பேச்சுகள் பரவலாக பேசப்படுகின்ற போதிலும் மறுபுறம் நாட்டில் தேர்தல் ஒன்று இவ்வருடம் நடக்குமா? என்ற சந்தேகமும் எழுந்து நிற்கின்றது.

பெரும் எதிர்பார்ப்போடு நோக்கப்பட்ட உள்ளூராட்சித் தேர்தலை நடத்தாமல் ஒன்றுக்கு இரண்டு தடவைகள் இழுத்தடிப்புச் செய்தமையே நாட்டு மக்கள் தேர்தல் தொடர்பில் நம்பிக்கை இழக்கக் காரணமாக அமைந்துள்ளது.

இருப்பினும் உளளூராட்சித் தேர்தலைப் போன்று ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தலை இழுதடித்தால் அது நாட்டில் அமைதியின்மையை ஏற்படுத்தும் எனவும் ஆட்சியாளர்கள் நன்றாக அறிந்து வைத்திருப்பார்கள்.

இவ்வருடம் கட்டாயம் ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டிய தேவை இருக்கின்றது. அந்த வகையில் சிறுபான்மையின மக்கள் குறிப்பாகத் தமிழ் மக்கள் மற்றும் அவர்களுடைய பிரதிநிதிகள் எவ்வாறான முடிவுகளை எடுக்கப்போகின்றார்கள் என்ற பலத்த ஓர் எதிர்பார்ப்பு நிலவுகின்றது.

தமிழ் மக்களுடைய பிரதிநிதிகள் ஒரு சாரார் வேட்பாளர்களை அறிவித்ததன் பின்னர் தமது நிலைப்பாட்டை அறிவிப்பதாகவும் - இன்னொரு சாரார் இந்த ஜனாதிபதித் தேர்தலை தமிழ் மக்கள் புறக்கணிக்க வேண்டும் எனவும் - மேலும் சிலர் இந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்க் கட்சிகள் இணைந்து பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டும் எனவும் பலதரப்பட்ட கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

எது எவ்வாறிருப்பினும் தமிழ் மக்கள் 75 வருட காலமாக நம்பி ஏமாந்த நிலைமை இந்தத் தேர்தலிலும் தொடரக் கூடாது என்பதில் உறுதியாக இருக்க வேண்டும். தமிழ் மக்களுடைய தலைமைகள் எடுக்கும் முடிவுகள் தவறானாலும் மக்கள் சிந்தித்துச் செயலாற்ற வேண்டிய காலகட்டம் இது.

தென்னிலங்கை கட்சிகளைச் சேர்ந்த வேட்பாளர்கள் தேர்தல் காலங்களில் நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை தமிழ் மக்கள் மனங்களில் விதைத்து வாக்குகளைச் சுரண்டி விட்டு பின்னர் அதனை நிறைவேற்றத் தவறுகின்ற நிலைமைதான் இதுவரை தொடர்ந்து வருகின்றது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தமிழ் மக்கள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.அதில் இனப்பிரச்சினை, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், காணி விடுவிப்பு, பௌத்த மயமாக்கல், நில ஆக்கிரமிப்பு என்று உரிமை சார்ந்த மற்றும் மக்களுடைய இருப்பு சார்ந்த பிரச்சினைகள் பல நீண்டு செல்கின்றன. முடிவின்றித் தொடர்கின்றன.

இதுவரை ஜனாதிபதியாகத் தெரிவானவர்கள் எவருமே தமிழ் மக்களுடைய தேசிய அபிலாசைகளை நிறைவேற்றவில்லை. மாறாக உரிமைக்குப் பதிலாக அபிவிருத்திகளைத் திணிக்கும் நிலைமையே காணப்படுகின்றது.

எம் மக்கள் நீண்ட காலமாக உரிமைக்காக போராடி வருகின்றனர். அந்த மக்களை ஒருபோதும் அபிவிருத்தி திருப்திப்படுத்தாது. அவர்கள் அபிவிருத்திக்கு விலைபோகவும் மாட்டார்கள் என்பதை ஆட்சியாளர்கள் உணர்வதில்லை.

கடந்த காலங்களில் சிறுபான்மையின மக்களுடைய வாக்குக்கள் அரச தலைவர் தெரிவில் பெரும் செல்வாக்குச் செலுத்தின.

குறிப்பாக 2015 ஆம் ஆண்டு இடம்பெற்ற அரச தலைவர் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களுடைய


தவராசா சுபேசன்

வாக்குகளால் வெற்றி பெற்றிருந்தார்.அவரும் அதனை இறுதிவரை மறக்கவில்லை என்று அடிக்கடி சுட்டிக்காட்டுவார். அப்படிப்பட்ட ஒருவரால் கூட தனது பதவிக் காலத்தில் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க இயலவில்லை.

நன்றியை செயலில் காட்டாமல் வாயால் சொல்லிக் காட்டுவதில் பயனில்லை.

அதன்பின்னர் 2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற அரச தேர்தலில் சிறுபான்மையின மக்களுடைய வாக்குப் பலம் இல்லாமல் சிங்கள இனத்தைச் சேர்ந்த வேட்பாளர் ஒருவர் வெற்றி பெறலாம் என்ற நிலை உருவாக்கப்பட்டது.

அப்போது பொதுஜன பெரமுன சார்பில் போட்டியிட்ட கோட்டபாய ராஜபக்ஷ 69 லட்சம் வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியாக தெரிவானார்.

அவருக்கு யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் வெறுமனே 23,261 வாக்குகளும், வன்னி தேர்தல் மாவட்டத்தில் 26,105 வாக்குகள் மாத்திரமே கிடைத்திருந்தன.

அவரை எதிர்த்துப் போட்டியிட்ட ஐக்கிய தேசியக் கட்சியினுடைய சஜித் பிரேமதாஸவுக்கு யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் மூன்று லட்சத்துக்கும் அதிக வாக்குகளும் வன்னி தேர்தல் பரப்பில் ஒரு லட்சத்து 74 ஆயிரம் வாக்குகளும் கிடைத்திருந்தன. இருப்பினும் அவருக்கு கிடைத்த மொத்த வாக்குகள் 55 லட்சம் வாக்குகள் மாத்திரமே.

2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற அரச தலைவர் தேர்தலில் 35 வேட்பாளர்கள் போட்டியிட்ட போதிலும் கோட்டபாய ராஜபக்ஷ வெறுமனே

தொடர்ச்சி▼

# கால ஓட்டத்துக்கு ஏற்ப நகர வேண்டிய நிலைப்பாட்டில்...!

தொடர்ச்சி ▲

பெரும்பான்மையின சமூகத்தினருடைய வாக்குகளை மாத்திரம் கொண்டு மொத்த வாக்குகளில் 52.25 சத விகித வாக்குகளைத் தன்வசப்படுத்தியிருந்தார்.

மறுபக்கம் சிறுபான்மையின மக்கள் ஆதரித்த சஜித் பிரேமதாச மொத்த வாக்கில் 41.99 சதவிகித வாக்குகளையே பெற்றிருந்தார்.

இது தமிழ் மக்களுக்கு பாரிய ஓர் செய்தியைத் தெரிவித்திருந்தது. பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த வேட்பாளர்களுக்கு சிறுபான்மையின மக்களுடைய ஆதரவு துளியேனும் தேவையில்லை என்ற செய்தியை உணர்த்தியது. அவர்கள் அதனைச் செயலிலும் காட்டியிருந்தனர். ஆனால் அந்தச் செய்தி நீண்ட காலம் நிலைக்கவில்லை. பெரும்பான்மையின சமூகமே இரண்டு வருடங்களில் ஆட்சியாளர்களுடைய தன்னிச்சையான செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து வீட்டுக்கு அனுப்பி வைத்தது.

இந்த நிலையில் இடம்பெற இருக்கும் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்ற குழப்ப நிலைக்குள் தமிழ் மக்களும்– தமிழ்த் தலைமைகளும் தள்ளப்பட்டுள்ளனர்.

தற்போதைய அரசியல் நடவடிக்கைகளை அடிப்படையாக வைத்துப் பார்க்கும் போது, சஜித் பிரேமதாச மற்றும் அனுர குமார ஆகியோர் அரச தலைவர் போட்டியில் களமிறங்குவது உறுதியாகியுள்ளது.அதனை விட தற்போதைய அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் களமிறங்குவார்.

கடந்த தேர்தலில் ஆதரித்த சஜித் பிரேமதாஸவையே இம்முறையும் ஆதரிப்பதா? அல்லது இக்கட்டான நிலைமையிலும் துணிச்சலாக நாட்டை பொறுப்பெடுத்த ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதா? அல்லது புதிய மாற்றத்துக்காக அனுர குமாரவை ஆதரிப்பதா? என்ற மூன்று தெரிவுகள் தமிழ் மக்கள் முன் காணப்படுகின்றன. தேர்தல் காலம் நெருங்க நெருங்க இந்த தெரிவுகள் அதிகரிக்கக்கூடும்.

இந்த நிலையில் புதியதோர் தெரிவாக சர்வதேசத்துக்குச் செய்தி சொல்லும் முகமாகத் தமிழ் மக்கள் சார்பில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டும் என்ற கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

தற்போதைய காலகட்டத்தில் தமிழ் கட்சிகள் ஆளுக்கு ஓர் பக்கம் பிரிந்து நிற்கின்றன. கட்சி உறுப்பினர்களுக்கு இடையே இணக்கப்பாடு இல்லாத நிலைமை உள்ளது. இந் நிலையில் தமிழ் மக்களை ஒரு குடையின் கீழ் கொண்டு வருவதென்பதும் – தமிழ் மக்கள் அனைவரும் விரும்பக் கூடிய பொது வேட்பாளர் ஒருவரை கண்டுபிடிப்பதென்பதும் மிகக் கடினமான செயற்பாடு.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளரை முன்னிறுத்துவது காலத்தின் தேவை என நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் வலியுறுத்தியிருந்தார்.

தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தி அதனூடாக சர்வதேசத்துக்கு ஆழமான செய்தி ஒன்றை கூறவே பலரும் விரும்புகின்றனர்.ஆனால் அது எவ்வளவு தூரத்துக்குச் சாத்தியப்படும் எனத் தெரியவில்லை.

தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்க வேண்டிய கட்சிகள் நாலா பக்கமும் பிரிந்து நிற்கின்றனர். இந்த நிலையில் மக்களை ஒன்றிணைப்பது என்பது மிகக் கடினம்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு மாகாணத்தில் கோட்டபாய ராஜபக்ஷவுக்குக் கிடைத்த வாக்குகள் மிகச் சொற்ப வாக்குகள் என்பது உண்மையே. ஆனால் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெற்ற பின்னர் சில மாதங்களில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் கோட்டபாய ராஜபக்ஷவை ஆதரித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பாக யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் போட்டியிட்ட அங்கஜன் இராமநாதன் தமிழ் தேசிய கட்சிகளுடைய வேட்பாளர்களைப் பின்தள்ளி மாவட்டத்திலேயே அதிக விருப்பு வாக்குகளைப் பெற்று வரலாற்றுச் சாதனை படைத்திருந்தார்.

அது போன்றே ஈழ மக்கள் ஜனநாயக கட்சியைச் சேர்ந்த டக்ளஸ் தேவானந்தாவும் அதிகளவு வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றத்துக்குத் தெரிவானதுடன், தேசியப் பட்டியல் ஊடாகவும் மேலும் ஓர் ஆசனத்தைப் பெற்றிருந்தார்.

இதனூடாகத் தமிழ் மக்கள் தென் இலங்கைக் கட்சிகளை ஆதரிக்கத் தொடங்கி விட்டனர் என்ற உண்மையும் உரிமைக்குச் சமாந்தரமாக மக்கள் அபிவிருத்திக்கும் முக்கியத்துவம் கொடுக்கத் தலைப்பட்டு விட்டனர் என்ற உண்மையும் உணர்த்தப்பட்டுள்ளது.

இவ்வாறு கட்சிகளும் – மக்களும் நாலா பக்கம் பிரிந்து நிற்க பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்திச் சர்வதேசத்துக்குப் பலமான செய்தி ஒன்றைக் கூறமுடியுமா என்பது சந்தேகமே.

அவ்வாறு சர்வதேசத்துக்கு ஆணித்தரமான செய்தி ஒன்றைக் கூற வேண்டுமானால் தமிழ் மக்கள் மனங்கள் ஒன்றுபடுவது எவ்வளவு முக்கியமானதோ அந்தளவுக்குத் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றுபட வேண்டியதும் அவசியமானது. கட்சிகள் ஆளுக்கு ஓர் பக்கம் பிரிந்து நின்று கொண்டு மக்களை ஒன்றிணையச் சொல்வதில் அர்த்தமில்லை.

தென்னிலங்கைக் கட்சிகளைச் சேர்ந்த சகல வேட்பாளர்களையும் புறக்கணித்து தனித்து நின்று நாம் சாதிக்கப்போவது கிடையாது. கடந்த காலங்களில் சர்வதேசத்துக்குத் தமிழர்கள் தனித்து நிற்கின்றனர் என்ற செய்தியைப் பல தேர்தல்கள் ஊடாக வெளிப்படுத்தியுள்ளோம். அதனால் என்ன பலனை தமிழ் மக்கள் கண்டார்கள்?

நாட்டில் நாமும் நாம் பேரம் பேசும் சக்திகளாக உருவெடுக்க வேண்டுமானால் தமிழ் மக்களுடைய கோரிக்கைகளை ஓரளவுக்கேனும் நிறைவேற்றக் கூடிய – தமிழ் மக்களை அனுசரித்துச் செல்லக் கூடிய – தமிழ் மக்களை வதைக்காத கொள்கைகளைக் கொண்ட வேட்பாளருக்கு எமது ஒட்டு மொத்த ஆதரவையும் தெரிவித்து எமது தேசிய அபிலாசைகளையும் அதனோடு இணைந்த அபிவிருத்திகளையும் முன்னகர்த்திச் செல்ல முடியும்.

தமிழ் மக்கள் சார்பாகப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தி ஒட்டுமொத்த தமிழ் மக்களும் அவருக்கு வாக்களிப்பது என்பது தற்போதைய காலகட்டத்துக்குப் பொருத்தப்பாடற்றது.

எனவே கால ஓட்டத்துக்கு ஏற்ப எமது இராஜதந்திர நகர்வுகளை முன்னகர்த்த வேண்டியது மிக அவசியமானது. இதனை தமிழ் மக்கள் உணர்ந்து செயற்பட வேண்டும்.

# காணி உறுதிப் பத்திரங்கள் பதிவு செய்தல் மன்னாரில்!



**(மன்னார்)**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்த ஆண்டில் இருபது லட்சம் காணி உறுதிகள் வழங்கும் செயற்றிட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பூரண அளிப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் காணிகளை பதிவு செய்யும் நிகழ்வு மன்னார் சாந்திபுரம் மற்றும் சௌத்பார் கிராமங்களில் இடம் பெற்றுள்ளது.

நீண்ட காலமாக அரச காணிகளில் தற்காலிக காணி ஆவணங்களுடன் வாழ்ந்து வரும் மக்களின் காணி உரிமைகளை உறுதிப்படுத்தும் விதமாக மேற்கொள்ளப்படும் குறித்த செயற்றிட்டத்தின் கீழ் மன்னார் பிரதேசத்தில் நடமாடும் சேவை ஊடாக பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அதன் அடிப்படையில் முதல் கட்டமாகப் பிணக்குகள் இன்றி உரிமையாளர் மாற்றம் ஏதும் இடம் பெறாத காணிகளின் உரிமையாளர்களுக்கு விரைவாக பூரண அளிப்பு வழங்குவதற்கான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதே நேரம் மன்னார் பிரதேச செயலக பிரிவில் பூரண அளிப்பைப் பெற்றுக் கொள்ளக் கூடிய விதமாக எந்த ஒரு பிணக்குகளும் அற்ற உரிமை மாற்றம் செய்யப்படாத தற்காலிக காணி ஆவணங்களைக் கொண்டுள்ள காணி உரிமையாளர்கள் தற்காலிக காணி பத்திரத்தின் மூலப் பிரதி, பிறப்பு சான்றிதழ், திருமண சான்றிதழ், அடையாள அட்டை பிரதி என்பவற்றை சமர்ப்பித்து பூரண அளிப்புக்கான பதிவுகளை மேற்கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளனர்.

# ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தில் புதிய பிரதேச செயலாளர் கடமையேற்பு





**(எம்.எம்.றம்ஸீன்)**

புதிய ஆலையடிவேம்பு பிரதேச செயலாளராக ஆர்.திரவியராஜ் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இதன் போது பதில் பிரதேச செயலாளராகக் கடமையாற்றிய த.கஜேந்திரன் தனது கடமையைக் கையளித்தார்.

நிகழ்வில் கிழக்கு மாகாண ஆள் பதிவுத் திணைக்களத்தின் பிரதி ஆணையாளராகக் கடமையாற்றிய ஆர்.திரவியராஜ் ஆலையடிவேம்பு பிரதேச செயலக மகாகணபதி ஆலயத்தில் இடம்பெற்ற பூஜை வழிபாடுகளில் கலந்து கொண்டார்.

பிரதேச செயலகத்துக்கு வருகை தந்த பிரதேச செயலாளருக்கு முன்னாள் பதில் பிரதேச செயலாளர் த.கஜேந்திரன், உதவி பிரதேச செயலாளர் ஆர்.சுபாகர் ஆகியோர் வாழ்த்துத் தெரிவித்தனர்.

இறுதியாக பிரதேச செயலக வளாகத்தில் மரக்கன்றுகள் நட்டு வைக்கப்பட்டன.

இவர் வெல்லாவெளி , நிந்தவூர், அம்பாறை, ஆகிய பிரதேச செயலகங்களில் உதவிப் பிரதேச செயலாளராகவும் பொத்துவில் பிரதேச செயலாளராகவும் இறுதியாகக் கிழக்கு மாகாண ஆட்பதிவு திணைக்களத்தின் பிரதி ஆணையாளராக கடமையாற்றிய நிலையில் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# பாகிஸ்தான் அணுகுண்டு குறித்து இந்தியா மதிப்பளிக்க வேண்டும்

## காங்கிரஸ் தலைவரின் கருத்தால் சர்ச்சை

பாகிஸ்தானிடம் அணுகுண்டு இருப்பது தொடர்பில் இந்தியா மதிப்பளிக்க வேண்டும் என காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான மணிசங்கர் ஐயர் கூறியுள்ளமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

நேர்காணல் ஒன்றின்போது கருத்துரைத்த மணிசங்கர் ஐயர், பாகிஸ்தானிடம் அணுகுண்டு இருப்பதை இந்தியா மதிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

“பாகிஸ்தானும் இறையாண்மை கொண்ட நாடாகும்.

எனவே, அந்த மரியாதையை தக்க வைத்துக் கொண்டு, எவ்வளவு கடுமையாக வேண்டுமானாலும் அந்த நாட்டை



பற்றி பேசுங்கள்” என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

“பாகிஸ்தான் அதன் அணுகுண்டை லாகூரில் வெடிக்க வைத்தால் அதன் கதிரியக்கக் கதிர்கள் 8 வினாடிகளில் அமிர்தசரஸை அடையும்.

இந்நிலையில், இந்தியா அவர்களுக்கு மரியாதை கொடுக்காவிட்டால், இந்தியாவுக்கு எதிராக அணுகுண்டைப் பயன்படுத்த அவர்கள் நினைப்பார்கள்.

அதனைப்பற்றி பேசாவிட்டால், அவர்கள் அணுகுண்டை வெடிக்கவைப்பது பற்றி சிந்திக்கமாட்டார்கள்” என்றும் மணிசங்கர் ஐயர் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே காங்கிரஸின் சர்வதேச தலைவரான சேம் பிட்ரோடா, தென்னிந்தியர்களை ஆபிரிக்கர்கள் போன்று இருக்கிறார்கள் என்று கூறிய விடயம், சர்ச்சைக்கு உள்ளானது.

இதனை எதிர்க்கட்சிகளுடன் இணைந்து காங்கிரஸும் நிராகரித்த நிலையில், அவர் காங்கிரஸில் இருந்து பதவி விலகிய சம்பவம் கடந்த வாரம் இடம்பெற்றமை குறிப்பிடத் தக்கது.

# ‘சொந்த நாட்டை காங். அச்சுறுத்துகிறது’

## மணி சங்கர் கருத்துக்கு பிரதமர் மோடி கண்டனம்

‘பாகிஸ்தான் வசம் அணுகுண்டு உள்ளது’ என்ற காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான மணி சங்கர் அய்யரின் கருத்துக்கு பிரதமர் மோடி பதிலடி தந்துள்ளார். இதில் பாகிஸ்தான் தற்போது எதிர்கொண்டு வரும் பொருளாதார சூழலை பிரதமர் மோடி குறிப்பிட்டுப் பேசியுள்ளார்.

அது பல மாதங்களுக்கு முன்னர் பதிவு செய்யப்பட்ட காணொலி என மணி சங்கர் அய்யர் விளக்கம் கொடுத்தார். தற்போது அது வைரலான நிலையில் அது சார்ந்து பிரதமர் மோடி



தனது கருத்தை தெரிவித்துள்ளார்.

“மீண்டும் மீண்டும் காங்கிரஸ் கட்சி இந்தியாவை அச்சுறுத்தி வருகிறது. பாகிஸ்தான் வசம் அணுகுண்டு உள்ளதை பாருங்கள் என அவர்கள் சொல்கிறார்கள். அதாவது நம் நாட்டின் மீதான தாக்குதல் குறித்து பேசுகிறார்கள்.

குண்டுகளை தன்வசம் வைத்துள்ள பாகிஸ்தான் நாட்டின் நிலையைப் பாருங்கள். தங்கள் குண்டுகளை விற்பனை செய்ய முயல்கிறார்கள். வாங்குவதற்கு யாரும் முன்வரவில்லை. ஏனெனில், அவர்களது தரம் குறித்து அனைவரும் அறிந்ததே” என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

ஒடிசா மாநிலத்தில் நடைபெற்ற தேர்தல் பரப்புரையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

# நரேந்திர மோடி ஒரு ராஜா நாட்டின் பிரதமர் அல்லர்

## ராகுல் காந்தி விமர்சனம்

“நரேந்திர மோடி மீண்டும் பிரதமராகப் போவதில்லை என்பதை எழுத்துபூர்வமாகவே எழுதி தருகிறேன். நரேந்திர மோடி ஒரு ராஜா, அவர் ஒரு நாட்டின் பிரதமர் அல்லர்” என காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி விமர்சித்துள்ளார்.

உத்தரப் பிரதேச மாநிலம் லக்னோவில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி உரையாற்றினார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“கடந்த காலங்களில் காங்கிரஸ் கட்சியும் தவறு செய்திருக்கிறது, இதை காங்கிரஸ் கட்சியில் இருந்து கொண்டே சொல்கிறேன். எதிர்காலத்தில் அதன் அரசியலை மாற்ற வேண்டும்.

நரேந்திர மோடி மீண்டும் பிரதமராகப் போவதில்லை என்பதை நீங்கள் விரும்பினால் எழுத்துபூர்வமாகவே எழுதித் தருகிறேன். நரேந்திர மோடி ஒரு ராஜா, அவர் ஒரு நாட்டின் பிரதமர் அல்ல. அமைச்சரவை, நாடாளுமன்றம் அல்லது அரசியலமைப்பு ஆகியவற்றுடன் அவருக்கு எந்தவித தொடர்பும் இல்லை. மோடி, 21 ஆம் நூற்றாண்டின் ராஜா. நாட்டில் அதிகாரம், சக்தி பொருந்திய இரண்டு அல்லது மூன்று நிதியாளர்களுக்கு பின்புலமாக இருக்கிறார்.



மக்களவை தேர்தலில் பா.ஜ.க. 180 இடங்களுக்கு மேல் வெல்லாது. இண்டியா கூட்டணி அரசு ஆட்சிக்கு வந்ததும், சாதி அடிப்படையிலான மக்கள் தொகை கணக்கெடுப்புக்கு உத்தரவிடுவோம். எனக்கு அதிகார அரசியலில் விருப்பமில்லை. என்னைப் பொறுத்தவரை அதிகாரம் என்பது பொதுமக்களுக்கு உதவும் ஒரு கருவி. நாட்டை பலப்படுத்த வேண்டும்.” - என்றார்.



# உக்ரைனுக்கு 400 மில்லியன் டொலருக்கு இராணுவ உதவி: அமெரிக்கா அறிவிப்பு

உக்ரைனுக்கு மேலும் 400 பில்லியன் டொலர்கள் மதிப்பிலான ஆயுத உதவிகளை வழங்குவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

உக்ரைன் மற்றும் ரஷ்யா இடையேயான போர் இன்று 806 நாளாக நீடித்து வருகின்ற நிலையில் இந்த போரில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர்.

இந்த போரில் உக்ரைனுக்கு ஆயுத உதவிகளை அமெரிக்கா உள்பட மேற்கத்திய நாடுகள் வழங்கி வருகின்றன.

அத்தோடு, போரை நிறுத்த பல்வேறு நாடுகள் முயற்சித்துவரும் நிலையில் அமைதி பேச்சுவார்த்தைக்கு இரு நாடுகளும் உடன்படாததால் போர் தொடர்ந்து நீடித்து வருகிறது.

இந்த நிலையில், உக்ரைனுக்கு மேலும் 400 பில்லியன் டொலர்கள் மதிப்பிலான ஆயுத உதவிகளை வழங்குவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

இதில் இராணுவ டாங்கிகள், ஏவுகணைகள் உள்பட அதிநவீன ஆயுதங்களும் அடக்கம் என அமெரிக்கா தெரிவித்துள்ளது. மேலும் இதன் மூலம் ரஷ்யாவுடனான போர் தொடங்கியது முதல் உக்ரைனுக்கு அமெரிக்கா வழங்கிய ஆயுத உதவி 50.6 பில்லியன் டொலரைஎட்டியுள்ளமைகுறிப்பிடத்தக்கது.

# அபுதாபியின் இளவரசர் ஷேக் ஹஸ்ஸா காலமானார்

அபுதாபி இளவரசர் ஷேக் ஹஸ்ஸா பின் சுல்தான் பின் சயீத் அல் நஹ்யான் காலாமானார் என அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த நிலையில், இவர் நேற்று முன்தினம் காலமானார் என அபுதாபி ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது.

காலமான அபுதாபி இளவரசர் ஐக்கிய அரபு இராச்சியத்தின் ஜனாதிபதி ஷேக் முகமது பின் சயீத் அல் நஹ்யானின் மூத்த மகனாவார்.

இந்த நிலையில், இவரது மறைவிற்கு உலகத் தலைவர்கள் பலரும் இரங்கல்



தெரிவித்துள்ள நிலையில், ஜனாதிபதி அலுவலகம் இவருக்கு இரங்கல் குறிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

இதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, “இறைவன், இவருக்கு பரந்த கருணையை கொடுக்க வேண்டும் அத்தோடு அவருக்கு சொர்க்கத்தை வழங்க வேண்டும்.

அத்தோடு அவரது குடும்பத்தினருக்கும் மற்றும் உறவினர்களுக்கும் ஆறுதலை வழங்க எல்லாம் வல்ல இறைவன் அல்லா அருள் புரிய வேண்டும்” என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அபுதாபி இளவரசரின் வயது குறித்து தகவல் ஏதும் வெளியிடப்படவில்லை என்பதுடன் இவர் குதிரை சவாரி செய்யும் வல்லமை கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தாய்வானில் நில அதிர்வு

தாய்வானில் மீண்டும் சக்திவாய்ந்த நில அதிர்வொன்று பதிவாகியுள்ளது.

ஹுலியன் மாகாணத்தின் கடற்பகுதியில் நேற்று மாலை குறித்த நில அதிர்வு பதிவாகியுள்ளதாக சீன நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

மேற்படி நில அதிர்வானது ரிக்டர் அளவுகோலில் 5.8 மெக்னிடியூட்டாக பதிவாகியுள்ளது.

அதேநேரம் நிலநடுக்கத்தால் உயிரிழப்புக்கள் ஏதும் பதிவாகவில்லை என சீன நில அதிர்வு மையம் குறிப்பிட்டுள்ளது.



பக்கங்கள் 05

# கனடா முரசு

சனிக்கிழமை 11/05/2024

## விபத்தில் உயிரிழப்பு: வாகன ஓட்டுநர் சரண்

கியூபெக், மே 11

கியூபெக்கின் லவால் பகுதியில் 30 வயது நபரொருவரை வாகனத் தால் மோதிவிட்டு சம்பவ இடத்தி லிருந்து சென்ற நபர் பொலிஸா ரிடம் சரணடைந்துள்ளார். C2




# கல்கரி பல்கலைக்கழகத்தில் கூடாரப் போராட்டக்காரர்களை

## வல்வந்தமாக அகற்றியது பொலிஸ்!

அல்பேர்ட்டா, மே 11

கல்கரி பல்கலைக்கழக வளாகத்தில் பாலஸ்தீன ஆதரவு போராட்டத்தை பொலி ஸார் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்த தில் தாம் மகிழ்ச்சியடைகிறார் என அல்பேர்ட்டா முதல்வர் டேனியல் ஸ்மித் தெரிவித்துள்ளார்.

மே 4ஆம் திகதி அல்பேர்ட்டாவில் உள்ள எட்மண்டனில் உள்ள அல்பர்ட்டா பல் கலைக்கழக வளாகத்தில் ஒரு கூடாரத் துடன் தொடங்கிய போராட்டம் சுமார் 35 கூடாரங்களாக உயர்ந்தது.

பல்கலைக்கழக நிர்வாகம் கோரினால், தனது அரசாங்கம் உதவுவதற்கு தயாராக இருப்பதாக முதல்வர் ஸ்மித் குறிப்பிட் டுள்ளார். C2

# தற்காலிக குடியிருப்பாளர்களுக்கு நிரந்தர வதிவிட அந்தஸ்து தரலாம்

## குடிவரவு அமைச்சர் மார்க் மில்லர் யோசனை



கியூபெக், மே 11

தற்காலிக குடியிருப்பாளர்களின் மக்கள்தொகையைக் கட்டுப்படுத்துவ தற்கான ஒரு வழி அவர்களுக்கு நிரந்தர வதிவிட அந்தஸ்தை வழங் குவதாகும் என்று குடிவரவு அமைச் சர் மார்க் மில்லர் தெரிவித்துள்ளார்.

ஆனால், தங்குவதற்கு விரும்பும் அனைவருக்கும் இங்கே இருக்க முடியும் என்று அர்த்தமல்ல எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மார்க் மில்லர் புதிய தற்காலிக குடி யிருப்பாளர்களின் எண்ணிக் கையில் வரம்புகளை நிர்ணயிப்பதற் கான திட்டத்தை அறிவித்ததிலிருந்து முதல் முறை யாக தனது மாகாண மற்றும் பிராந்திய சகாக்களை சந் தித்துள்ளார்.

தற்காலிக குடியிருப்பாளர்களின் எண்ணிக்கை அடுத்த மூன்று ஆண் டுகளில் கனடாவின் மக்கள்தொகை யில் ஐந்து சதவீதமாக குறையும், இது 2023 இல் இருந்த 6.2 சதவீதத்தி லிருந்து குறையும் என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.



# பேஸ்புக் மீது குறை கூறுகின்றார் கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ

பிரிட்டிஷ் கொலம்பியா, மே 11

பேஸ்புக் தாய் நிறுவனமான மெட்டா, மக்களிடமிருந்து பில்லியன் கணக்கில் வருமானம் ஈட்டும் சமூக ஊடக நிறுவனமானது, சமூகத்தின் நலன் குறித்து பொறுப்பினை எடுக்காதிருப்பதாக பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

பிரிட்டிஷ் கொலம்பியாவின் வெஸ்ட் கெலோவ்னா பகுதியில் செய்தியாளர்களைச் சந்தித்த போதே, ட்ரூடோ இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த கோடை காலத்தில் காட்டுத்தீ காரணமாக ஆயிரக்கணக்கான மக்களை வெளியேற்றும் பணியில் சமூகங்கள் ஈடுபட்டிருந்த நேரத்தில் காட்டுத்தீ மற்றும் தப்பிக்கும் வழிகள் பற்றிய தகவல்கள் மெட்டாவின் பேஸ்புக் தளத்தில் முடக்கப்பட்டன பிரதமர் தெரிவித்துள்ளார்.

சமூக ஊடகங்களில் கதைகள் பயன்படுத்தப்படும் செய்தி நிறுவனங்களுக்கு இழப்பீடு கோரும் மத்திய அரசின் இணையச் செய்திச் சட்டம் தொடர்பாக ஃபேஸ்புக் மற்றும் இன்ஸ்டாகிராமில் இருந்து கனடிய செய்திகளை மெட்டா தடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## விபத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

40 வயதுகளில் உள்ள ஒருவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கியூபெக்கின் லவால் பகுதியில் மே 9ஆம் திகதி மாலை வாகனத்தால் மோதிய 30 வயது நபர் உயிரிழந்தார்.

சம்பவத்திற்கு காரணமான வாகனத்தின் புகைப்படத்தினை பொலிஸார் வெளியிட்டிருந்தனர்.

இதனையடுத்தே சந்தேகநபர் தாமாகவே வந்து சரணடைந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.




## கல்கரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைதியான போராட்டம் நல்லது, ஆனால் ஒழுங்கு விதிகள் பின்பற்றப்பட வேண்டும் மற்றும் மாணவர்களின் கல்விக்கு இடையூறு ஏற்படக்கூடாது என்று அவர் கூறியுள்ளார்.

கேடயங்கள், தடியடிகள் மற்றும் ஃப்ளாஷ்பேங் வெடிமருந்துகளைப் பயன்படுத்தி, கல்கரி பொலிஸ் அதிகாரிகள் வியாழன் இரவு கல்கேரி பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த முகாமில் இருந்து எதிர்ப்பாளர்களின் குழுவை வலுக்கட்டாயமாக அகற்றினர்.


கூடாரத் தளத்தில் இருந்த பாலஸ்தீனிய சார்பு எதிர்ப்பாளர்களில் பெரும்பாலோர், பல்கலைக்கழகத்தின் மாணவர் மையத்தின் இல்லமான மேக்இவான் ஹாலுக்கு வெளியே அந்த இடத்தில் தங்கியிருந்தவர்களுக்கு எதிராக பொலிஸ் நடவடிக்கை எடுக்கத் தொடங்குவதற்கு சற்று முன்னதாகவே மூடை மூடிச்சுகளைக் கட்டிக் கொண்டு வெளியேற ஒப்புக் கொண்டனர்.

அச்சமயம், கல்கேரி பொலிஸ் சேவை உறுப்பினர் ஒருவர் போராட்டத் தலைவர்களில் ஒருவரிடம், மாணவர்கள் தாமாக வெளியேறினால் யாரும் கைது செய்யப்பட மாட்டார்கள் என்று உறுதியளித்தார்.

ஆனால் முகாமில் இருந்த மாணவர்கள் அனைவரும் அந்த ஒப்புக் கொள்ளவில்லை. நாங்கள் அசைய மாட்டோம் என்று பாடிக்கொண்டு ஒரு சிறிய குழு எதிர்ப்பாளர்கள் உறுதியாக இருந்தனர்.

சுமார் 11:10 மணியளவில், ஐந்து நிமிட எச்சரிக்கையை வழங்கிய சிறிது நேரத்திலேயே, பொலிஸார் தங்கள் கேடயங்களுடன் தள்ளிக் கலைக்கும் உந்துதலை ஆரம்பித்து, மீதமுள்ள சில டசின் எதிர்ப்பாளர்களை முகாம் பகுதியிலிருந்து வெளியேற்றினர்.

மாணவர்கள் இனிமேல், கூடாரங்கள், தடுப்புகள் அல்லது தடைகள் எதுவும் கொண்டு வரவில்லை என்றால்,வழமை போல அடுத்த நாள் பல்கலைக்கழகத்திற்குத் திரும்பலாம் என்றும் கூறப்பட்டது.




# LGBTQ+ சமூகத்தினரிடம் மன்னிப்பு கேட்கும் கனடிய இரத்த சேவைகள்!

ஒன்ராரியோ, மே 11

LGBTQ+ சமூகத்தினர் மீதான இரத்த தானம் செய்தல் தொடர்பான தடை குறித்த கொள்கைக்கு கனடிய இரத்த சேவைகள் மன்னிப்பு கோரியுள்ளது.

2022ஆம் ஆண்டு வரை இந்த தடை நடைமுறையில் இருந்தது, அது புதிய விதிகளால் மாற்றப்பட்டது, அதன் கீழ் அனைத்து நன்கொடையாளர்களிடமும் அவர்களின் பாலியல் நடத்தை பற்றி ஒரே கேள்விகள் கேட்கப்படும்.

ஒட்டாவாவில் நடந்த ஒரு நிகழ்வில் LGBTQ+ சமூக உறுப்பினர்களிடம் நேரில் மன்னிப்புக் கேட்பதாக இரத்த தானம் வழங்கும் சேவையின் தலைமை நிர்வாக அதிகாரி கிரஹாம் ஷெர கூறினார்.



# பலஸ்தீனத்தை அங்கீகரிக்கும் வாக்கெடுப்பை கனடா தவிர்ப்பு

ஒன்ராரியோ, மே 11

பலஸ்தீனத்தை முறையாக அங்கீகரிப்பதையும், தற்போதைய மோதலை நிறைவு செய்வதற்கு முன்னர் தேச அங்கீகாரத்தினை வழங்குவதனையும் நோக்கமாகக் கொண்ட ஐக்கிய நாடுகள் சபையின் மற்றொரு வாக்கெடுப்பினை கனடா புறக்கணித்துள்ளது.

இறுதியில் பாலஸ்தீன அரசை இஸ்ரேல் அரசாங்கம் தடுப்பதை தடுக்கும் கனடாவின் முயற்சிகளின் ஒரு பகுதி இது என்று பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

'இரு தேச தீர்விற்கு வழிவகுக்கும் செயற்பாடு ஒன்றின் முடிவாக பலஸ்தீன தேசத்தை அங்கீகரிக்க வேண்டும் என்பதே எமது நீண்டகால நிலைப்பாடாகும்' என அவர் குறிப்பிட்டுள்ளார்.




# விக்டோரியா பல்கலையில் தாக்குதல் பற்றி விசாரணை

பிரிட்டிஷ் கொலம்பியா, மே 11

விக்டோரியா பல்கலைக்கழகத்தின் மைதானத்தில் பலஸ்தீன ஆதரவு போராட்ட முகாமில் நடந்ததாகக் கூறப் படும் இரண்டு தாக்குதல் சம்பவங்கள் குறித்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பல்கலைக்கழக வளாகத்தில் கடமையில் ஈடுபட்ட அதிகாரிகளுக்கு இந்த வார தொடக்கத்தில் முகாமில் நடந்த தாகக் கூறப்படும் இரண்டு சம்பவங்கள் குறித்து அறிவிக்கப்பட்டதை அடுத்து விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

எனினும், தாக்குதல்களின் தன்மையை பொலிஸார் விவரிக்கவில்லை.

முதல் சம்பவம் குறித்து பொலிஸாருக்கு அறிவிக்கப்படாத போதிலும், இரண்டாவது சம்பவம் குறித்து பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முகாம்களில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு பொலிஸார் தொடர்ந்து பாதுகாப்பை வழங்குவார்கள் என பொலிஸார் கூறியுள்ளனர்.




# 90 ஆயிரம் புதிய வேலை வாய்ப்புக்கள் கனடாவில் ஏப்ரலில் பதிவாகியுள்ளன!

கனடாவில் ஏப்ரல் மாதம் சுமார் 90 ஆயிரம் புதிய வேலை வாய்ப்புக்கள் பதிவாகியுள்ளன.

கடந்த ஓராண்டு காலப் பகுதியில் பதிவான அதி கூடிய வேலைவாய்ப்பு எண்ணிக்கை இதுவாகும்.

கனடிய புள்ளிவிவரவியல் திணைக் களம் இந்த தகவல்களை வெளியிட்டுள்ளது.

ஏப்ரல் மாதம் பகுதி நேர வேலை வாய்ப்புக்கள் மூலம் இவ்வாறு வேலை வாய்ப்பு எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

கடந்த மாதம் வேலையற்றோர் எண்ணிக்கை 6.1வீதமாக காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, கனடாவில் இளையோர் மத்தியில் வேலைவாய்ப்பு இன்மை அதிகளவில் பதிவாகியுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

சுகாதாரம், விஞ்ஞானம், தொழில்நுட்பம், உணவு சேவை உள்ளிட்ட சில துறைகளில் வேலை வாய்ப்பு அதிகரித்துள்ளது.

# நீதிமன்றத் தடை உத்தரவை நாடும் மெக்கில் பல்கலைக்கழக நிர்வாகம்

கியூபெக், மே 11

மெக்கில் பல்கலைக்கழகம், அதன் வளாகத்தில் உள்ள பலஸ்தீன ஆதரவு முகாமின் எதிர்ப்பாளர்களுக்கு எதிராக நீதிமன்றத் தடை உத்தரவை நாடியுள்ளது.

அவர்கள் முகாமை அகற்ற வேண்டும் என்றும் மேலும் எந்த ஆக்கிரமிப்பிலிருந்தும் விலகி இருக்க வேண்டும் என்றும் பல்கலைக்கழக நிர்வாகம் கோரியுள்ளது.

இந்த உத்தரவு வழங்கப்பட்டால், முகாமில் பங்கேற்கும் மெக்கில் சமூகத்தின் உறுப்பினர்களுடன் விவாதங்களைத் தொடர்வதற்கான முயற்சிகள் நிறுத்தப்படாது எனவும் பல்கலைக்கழக நிர்வாகம் குறிப்பிட்டுள்ளது.

# கனடாவில் வெளிநாட்டு மாணவர்கள் நிரந்தர வதிவுரிமை பெறும் 5 வழிகள்

கனடாவில் வெளிநாட்டு மாணவர்கள் நிரந்தர வதிவுரிமை பெற்றுக்கொள்ளக் கூடிய ஐந்து வழிமுறைகள் பற்றி விவரிக்கப்பட்டுள்ளது.

கனடிய குடிவரவு குடியகல்வு திணைக்களத்தினால் இந்தத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

வெளிநாடுகளிலிருந்து கனடாவிற்கு வந்து உயர்கல்வியை பூர்த்தி செய்யும் மாணவர்கள், நாட்டில் நிரந்தரமாக வதிவதற்கு பல்வேறு வழிகள் காணப்படுகின்றன.

அவற்றில் சில வழிகள் குறித்து விவரிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக வெளிநாட்டு மாணவர்கள் கனடாவில் உயர் கல்வியை பூர்த்தி செய்ததன் பின்னர் தொடர்ந்து நிரந்தர வதிவுரிமை பெற்றுக்கொள்வதற்கு ஐந்து வழிமுறைகள் காணப்படுகின்றன.

1. The Express Entry Program
2. The PNP, or Provincial Nominee Program
3. Atlantic Immigration Program (AIP)
4. Rural and Northern Immigration Pilot (RNIP)
5. Agriculture and agri-food pilot

பட்டபின் கற்கையின் போது தொழில் செய்வதற்கான அனுமதி நிரந்தர வதிவுரிமை பெற்றுக் கொள்வதற்கான முக்கிய தகுதிகளில் ஒன்றாகக் காணப்படுகின்றது.

விரைவு நுழைவு முறையின் (Express Entry Program) ஊடாக வெளிநாட்டு பட்டதாரிகள் நிரந்தர வதிவுரிமைக்காக விண்ணப்பிக்க முடியும்.

வயது, கல்வி,மொழியறிவு, தொழில் வரலாறு உள்ளிட்ட பல்வேறு காரணிகளின் அடிப்படையில் இந்த விண்ணப்பதாரிகளுக்கு புள்ளிகள் வழங்கப்படும்.

கனடிய தொழில் அனுபவத்தின் அடிப்படையிலும் விண்ணப்பம் செய்ய முடியும்.

குறிப்பாக பிரெஞ்சு மொழியறிவு




மற்றும் குடிவரவு குடியகல்வு அமைச்சின் பரிந்துரைக்கு அமைவான தொழில்களில் 6 மாதங்கள் வரையில் ஈடுபடுதல் மேலதிக தகமையாகக் கருதப்படும்.

பி.என்.பி முறையின் (PNP, or Provincial Nominee Program) ஊடாகவும் நிரந்தர வதிவுரிமைக்காக வெளிநாட்டு மாணவர்கள் விண்ணப்பம் செய்ய முடியும். கனடாவின் பெரிய மாகாணங்கள் இந்த திட்டத்தின் கீழ் நிரந்தர வதிவுரிமை வழங்குகின்றன.

மாகாணங்கள் சில தகமைகளின் அடிப்படையில் வெளிநாட்டு மாணவர்களுக்கு இவ்வாறு நிரந்தர வதிவுரிமை வழங்கப்பட உள்ளது.

2025 ஆண்டளவில் பி.என்.பி முறையின் கீழ் 1,10,000 பேருக்கு நிரந்தர வதிவுரிமை வழங்கப்பட உள்ளது.

அட்லாண்டிக் குடிவரவுத் திட்டத்தின் (Atlantic Immigration Program) ஊடாகவும் நிரந்தர வதிவுரிமைக்காக விண்ணப்பம் செய்ய முடியும்.

அட்லாண்டிக் மாகாணங்களில் தகுதி வாய்ந்த வெளிநாட்டு பணியாளர்கள் பணிக்கு அமர்த்தப்படுவர்.

மேலும் அண்மையில் பட்டப் படிப்பினை பூர்த்தி செய்து கொண்ட வெளிநாட்டு மாணவர்களுக்கும் இதில் சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது.

மாகாணங்களில் நிலவும் ஆளணி வளப் பற்றாக்குறையை தீர்க்கும் வகையில் இந்த திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

கிராமிய மற்றும் வடக்கு குடிவரவு பரீட்சார்த்த திட்டத்தின் (Rural and Northern Immigration Pilot) ஊடாகவும் இந்த நிரந்தர வதிவுரிமை பெற்றுக்கொள்ள முடியும்.

உயர்கல்வியை பூர்த்தி செய்த வெளிநாட்டு மாணவர்கள் குறிப்பிட்ட சில கிராமங்களில் நிரந்தர வதிவுரிமை கோரி விண்ண்ணம் செய்ய முடியும்.

விவசாய மற்றும் உணவு பரீட்சார்த்த குடிவரவுத் திட்டத்தின் (Agriculture and agri-food pilot) ஊடாகவும் நிரந்தர வதிவுரிமை பெற்றுக்கொள்ள முடியும்.

விலங்கு வேளாண்மை, பசுமை விவசாயம், இறைச்சி பதப்படுத்தல் போன்ற தொழில்துறைகளிலும் சர்வதேச மாணவர்களுக்கு வாய்ப்பு உண்டு என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நிரந்தர வதிவுரிமை வழங்கப்படும் மாணவர்கள் நீண்ட காலத்திற்கு குறிப்பிட்ட இடங்களில் வதிய வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.